**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**அ.வ.எண். 88/2019**

**வாக்குமூலம்: வா.சா.3 – சுரேஷ் (எ) சிவசுப்பிரமணியன்**
**06.12.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் பாலசமுத்திரத்தில் எந்த முகவரியில் இருக்கிறேன் என்றால் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் தான் குடியிருக்கிறேன். நான் யாருக்கு ஆதரவாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் 1ம் வாதி முகமது யூசுப்புக்கு. வழக்கு பிரச்சனை சம்பந்தமாக எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் அந்த பகுதியில் பள்ளிக்கு செல்லும் போது இந்த பிரச்சனை குறித்து எனக்கு தெரியும். இந்த வழக்கு எந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2015 லிருந்து பிரச்சனை உள்ளது வழக்கு அதற்கு முன்பாகவே உள்ளது என்று நினைக்கிறேன். வழக்கு எந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு தெரியுமா என்றால் தெரியாது.

2. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் வாதி சொல்லித்தான் எனக்கு தெரியுமா என்றால் இல்லை, நான் சொல்லித் தான் தயார் செய்யப்பட்டது. வழக்கு வீட்டிற்காக அல்லது தடத்திற்கா என்றால் பொதுப் பாதைக்குதான் பிரச்சனை. வீடு மற்றும் பொதுப் பாதைக்கான புல எண் தெரியுமா என்றால் வீட்டின் புல எண்.829/9, பொதுப் பாதைக்கான புல எண்.829/10 பொதுப் பாதைக்கு வடக்கு வாதியின் வீடு உள்ளது. பொதுப் பாதைக்கு தெற்கு என்ன உள்ளது என்றால் கருப்புச்சாமியின் வீடு உள்ளது. பொதுப் பாதைக்கு மேற்கு என்ன உள்ளது என்றால் பாதை இருந்தது தற்போது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. எப்போதிலிருந்து மேற்படி பொதுப் பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் 2010, 2012 வருடங்களிலிருந்து ஆக்கிரமிப்பிலிருந்து வருகிறது. மேற்படி பாதையில் நான் எப்போதிலிருந்து பயன்படுத்தினேன் என்றால் எனது 12 வயது முதல் பயன்படுத்தினேன்.

3. தற்போது எனக்கு வயது எவ்வளவு என்றால் 50 ஆகிறது. மேற்படி பாதை எங்கு சென்று முடியும் என்றால் கடைவீதிக்கு சென்று முடியும். பாதைக்கு மேற்குப் பக்கம் உள்ள வீடுகள் எப்போது கட்டப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை, ஆனால் வீடுகள் உள்ளது. நான் சொல்வது போல் பொதுப் பாதை இல்லை என்றாலும், அதில் 70 ஆண்டுகளாக முத்தாளம்மன் கோவில் உள்ளது என்றாலும், அதன் மேற்குப் பக்கம் உள்ள வீடுகள் 50 ஆண்டுகளாக உள்ளது என்றாலும் சரியல்ல. வழக்குச் சொத்து வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வாதியுடன் பிறந்த சகோதரர் பெயர் தெரியுமா என்றால் நினைவில்லை. வாதியின் தகப்பனார்

பெயர் தெரியுமா என்றால் நினைவில்லை.

4. 1ம் வாதி அவரது சகோதரரிடம் இருந்து அவரது பாகத்தை எழுதி வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வீட்டை 1ம் வாதி தான் முழுமையாக பயன்படுத்தி வருகிறார் என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு எத்தனை வாசல்கள் உள்ளது என்றால் தெற்கே நான்கு வாசல்கள், கிழக்கே ஒரு வாசல் உள்ளது. தெற்குப் பக்கம் உள்ள வாசல்களில் மேற்கு கடைசியில் உள்ள வாசல் கோவில் காம்பவுண்டில் உள்ளது என்றால் புறம்போக்கு நிலத்தில் உள்ளது. புறம்போக்கு பாதைக்கு வடக்கு பக்கம் தான் மேற்படி வாசல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கடைசி வாசல் 1ம் வாதி அவரது சகோதரரிடம் வாங்கிய பங்கில் வருகிறது என்றால் 1ம் வாதி அனுபவித்து வருகிறார், யாருடைய பங்கு என்று தெரியாது.

5. 1, 2 பிரதிவாதிகள் வீடு அருகருகே உள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்கே கோவில் உள்ளது என்றால் இல்லை, திட்டு உள்ளது. 1, 2 பிரதிவாதிகளின் வீட்டிற்கு தெற்குப் பக்கம் ஜியாவுதீன் வீடு உள்ளதா என்றால் முஸ்லீம் நபர்கள் வீடு உள்ளது. 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு தெற்குப் பக்கம் என்ன உள்ளது என்றால் ஜியாவுதீன் வீடு உள்ளது. 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு வடக்குப் பக்கம் பாதை என்றால் சரிதான். பாதைக்கு வடக்குப் பக்கம் 1ம் வாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். வாதி மனுக் கொடுத்து 3, 4 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பை பார்வையிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் வந்த விபரம் தெரியும் எதற்காக வந்தார்கள் என்று தெரியாது. சாட்சி பின்னிட்டு இடப் பிரச்சனைக்காக வந்ததாக சொல்கிறார்.

6. நிரூபண வாக்குமூலத்தில் வாதி உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் மனு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை வாதி தனது வழக்குரையில் சொல்லவில்லை என்றாலும், அது தொடர்பாக எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் தான் புதிதாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வட்டாட்சியர் ஆக்கிரமிப்பை அகற்றியதாக கடிதம் கொடுத்ததாக நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன், அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உயர்நீதிமன்ற உத்தரவுப்படி 3, 4 பிரதிவாதிகள் செயல் படவில்லை என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் அதிகாரிகள் வந்தார்கள், என்ன நடந்தது என்று தெரியாது.

7. நான் சொல்வது போல் வாதிகள் உயர்நீதிமன்றத்தில் எவ்வித உத்தரவும் பெறவில்லை என்றாலும், 1, 2 பிரதிவாதிகள் தான் உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றாலும் சரியல்ல. வழக்குச் சொத்தை இடையூறு

செய்யக் கூடாது என்று 1, 2 பிரதிவாதிகள் தான் உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது. புல எண்829/10 மற்றும் புல எண்.829/58 ஆகியவற்றின் விஸ்தீரணம் பற்றி நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன், எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியுமா என்றால் தெரியாது, ஆவணங்களை பார்த்தால்தான் சொல்ல முடியும். கிராம நிர்வாக அலுவலரை இந்த வழக்கில் விசாரணை செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

8. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் அளந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. நான் வழக்கு சொத்து விபரங்கள் குறித்து முன்னுக்குப் பின் முரணாக சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரிந்ததை சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்து எனக்கு தெரியாது என்றால் சில விபரங்கள் தெரியும், சில விபரங்கள் தெரியாது. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியத்தை ஏற்க இயலாது என்றால் சரியல்ல.

<u>3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை.</u>

ஓம்/–S.கபாலீஸ்வரன்.
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.